பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 01 செவ்வாய்க்கிழமை (14.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

## ஊரடங்கை மீறியவர்களை தோப்புக்கரணம் போட வைத்த பொலிஸ் அதிகாரிகள் பணி இடைநீக்கம்



(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறி பாதையில் பயணித்த நால்வரை தோப்புக்கரணம் போடவைத்து தண்டித்த இரு போக்குவரத்து பொலிஸார் உடன் அமுலுக்கு வரும் வகையில் நேற்றுமுதல் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கொழும்பு நகர போக்குவரத்து பிரிவு மற்றும் அவசர அழைப்புப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் உத்தர 02



### மயிலிட்டி வாசி
## கொரோனாவால் லண்டனில் பலி



02

## கொரோனா 217

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 பேர் நேற்று திங்கட்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ள 02

### கொரோனா தடுப்பு என்ற பெயரில்
# கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்க அரசு முயற்சி
### 32 சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கடிதம்

(கொழும்பு) கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்க அரசு முயற்சி செய்து வருவதாக சிவில் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

32 சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கோட்டாபயவுக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)



## முடக்கப்பட்டிருந்த தாவடி நேற்றுடன் விடுதலையானது

02

### நாடு முழுவதும் விசேட சுற்றிவளைப்பு
## ஊரடங்கை கடுமையாக்க பொலிஸ் சிறப்பு நடவடிக்கை
### பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதும் நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிவரையான 24 மணித்தியால 02

## 137 கிலோ கஞ்சாவுடன் மணற்காட்டில் மூவர் கைது

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மணற்காட்டு கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த படகிலிருந்து 137 கிலோ கேரள கஞ்சாவினை மீட்டுள்ளதுடன் மூவரை கைது செய்துள்ளதாகவும் கடற் 02

### பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால்
## அடுத்த இரு வாரத்தில் ஊரடங்கை தளர்த்த முடியும்

(கொழும்பு)

இறுக்கமான சுகாதார மற்றும் சட்ட கட்டமைப்பில் தொடர்ந்தும் செயற்பட்டால் "கோவிட்-19" கொரோனா வைரஸ் தொற்றுநோய்ப் பரவலை 03

### ஊரடங்கை மீறிய
## 25,031 பேர் நாடுமுழுவதும் கைது

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 25,031 பேர் இதுவரையில் கைது செய்யப்பட் 02

## ரஞ்சன் ராமநாயக்க கைது

(கொழும்பு)

பொலிஸ் அலுவலகரின் கடமைக்கு இடையூறு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இரவு அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிரீஹான பகுதியில் வீதித் தடையை ஏற்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

### அரியாலையில் தனிமைப்படுத்தப்பட்டோர்
## நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிலதெனியா தேவாலய ஆராதனையில் கலந்துகொண்டமையால் கொரோனா தொற்று 03

## ஆட்டக்காரி அரிசியின் நிர்ணய விலை ரூ.125

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆட்டக்காரி மற்றும் மொட்டைக் கறுப்பன் ஆகிய நெல் வகைகளிலிருந்து பெறப்படும் நாட்டு அரிசி ஒரு கிலோ கிராமின் அதிகூடிய சில்லறை விலையாக 125 ரூபாயினை நிர்ண 03

## ஊரடங்கை மீறிய...

வின் பேரில், நகர போக்குவரத்து பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரத்ன கூறினார்.

மருதானை பொலிஸ் பிரிவின், டாலி வீதி பகுதியில் நேற்றுமுன்தினம் ஊரடங்கு அமுலில் இருந்த போது, ஊரடங்கு அனுமதிப் பத்திரம் இன்றி அந்த வீதியால் நடந்து சென்ற நால்வரை, இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிடித்து, தோப்புக்கரணம் போடவைத்து தண்டித்தனர்.

தனது கைகளால் இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு குனிந்து எழும் வகையில் இவ்வாறு அந்த நால்வரும் தண்டிக்கப்பட்ட காட்சிகள் ஊடகங்களில் ஒளிபரப்பாகின. இதனையடுத்து பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை ஆரம்பித்தது.

இதன்போது குறித்த பொலிஸ் அதிகாரிகள் இருவரும் கொழும்பு நகர போக்குவரத்து பிரிவின் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் அதிகாரிகள் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே, கொழும்பு நகர போக்குவரத்து பிரிவு மற்றும் அவசர அழைப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் புஷ்பகுமாரவின் ஆலோசனைக்கு அமைய, அந்த பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் குறித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் கட்டளைகளுக்கு அடி பணியாமை, பொலிஸாரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் தற்போது பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள மேற்படி இருவருக்கும் எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனாவால்...

கொரோனா அறிகுறியுடன் லண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ். மயிலிட்டியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னையா அமிர்தலிங்கம் (வயது - 67) என்பவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் லண்டனில் வசித்துவந்த நிலையில், காய்ச்சலால் அவதிப்பட்டு வந்திருந்தார்.

மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து ஒரு கிழமைக்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து அவரது குடும்பத்தவர்களை 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு மருத்துவமனை தரப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகவும், நுரையீரல் மற்றும் சிறுநீரகங்கள் செயலிழந்து வருவதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மருத்துவமனை தரப்பில் இருந்து குடும்பத்தாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அவையங்கள் செயலிழந்த நிலையில் நேற்று அதிகாலை குடும்பத்தினரை பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் லண்டன் நேரம் அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளார். (ம-3)

## முடக்கப்பட்டி...

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் வசித்த தாவடி கிராமம் 21 நாட்கள் முடக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டது.

தாவடிக் கிராமம் கொரோனா தொற்று இல்லாத பிரதேசமாக சுகாதாரத் துறையினரால் உறுதிப்படுத்தப்பட்டு, அங்குள்ள மக்கள் பாதுகாப்பாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாவடியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் கடந்த மார்ச் 22ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டார்.

அன்றைய தினத்தில் இருந்து அவரது வதிவிடத்தைச் சூழவுள்ள கிராமம் சுகாதாரத் துறையினரால் இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் முடக்கப்பட்டது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து 21 நாட்களின் பின் தாவடி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இதுகுறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,

அரியாலையில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்டவர்களுக்கு கோவிட்-19 தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர் களுள் பெரும்பாலோனாருக்கான சுய தனிமைப்படுத்தற்செயற்பாடுகள் 23.03.2020 முதல் ஆரம்பிக்கப்பட்டன.

இன்றையதினம் (நேற்று) அவர்கள் தத் தமக்குரிய சுய தனிமைப்படுத்தற் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருப்பதைத் தொடர்ந்து அவர்களுக்கான சுய தனிமைப்படுத்தல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்தின் முதலாவது கோவிட்-19 நோயாளியின் வதிவிடத்தைச் சூழ தாவடிப் பகுதியில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட நடமாட்டத்திற்கான கட்டுப்பாடுகள் மற்றும் சுய தனிமைப்படுத்தல்களும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனாலும் தேவாலயத்திற்கு சுவிற்சர்லாந்திலிருந்து வருகை தந்து தொற்றுக்கு மூலகாரணமாக இருந்தவருடன் தனிப்பட்ட வகையில் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்கள் என்ற வகையில் 20 பேர் காங்கேசன்துறையில் நிறுவனத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

அவர்களில் 06 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால் அவர்கள் உரிய சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். ஏனைய 14 பேருக்கான தனிமைப்படுத்தல் காலம் 23.04.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்களுக்குரிய ஆய்வுகூடப் பரிசோதனைகளும் மீளச் செய்யப்படவுள்ளன. தேவாலய நிகழ்வுகளால் தனிமைப்படுத்தப்பட்ட ஏனையோருக்கும் படிப்படியாக ஆய்வுகூடப் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறியுள்ளார். (ம-3)

## 137 கிலோ...

படையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை மணற்காடு கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்று சென்று கொண்டிருப்பதாக கடற்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் குறித்த படகு மறிக்கப்பட்டு, படகில் இருந்து 137 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் படகில் பயணித்த மூன்று சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## கொரோனா...

னர் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 217ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

56 பேர் முழுமையாகச் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

154 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடுமுழுவதுமுள்ள 22 வைத்தியசாலைகளில் 147 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ம-3)

## ஊரடங்கை கடுமை...

யங்கள் ஊரடங்குச் சட்டத்தை கடுமையாக்கி சிறப்பு பொலிஸ் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார்.

இந்தத் தகவலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

அத்தியாவசிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தேவைக்கு மாறாக வேறு நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்திய பல சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

வேறு எந்த நோக்கத்திற்காகவும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக வழங்கப்பட்ட ஊரடங்கு உத்தரவைப் பயன்படுத்துவது சட்டத்துக்குப் புறம்பானதாகும்.

பாரம்பரிய புத்தாண்டு தினத்தன்று உறவினர்கள் வீடுகளுக்குச் செல்ல ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களை மக்கள் பயன்படுத்துவதற்கான போக்கு காணப்படுவதால், சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தை பின்பற்றுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார். (ம-3)

## 25,031...

டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் இது வரையான காலப் பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் ஊரடங்கு சட்டத்தை மீறிய 1512 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 354 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 6426 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கருத்துச் சுதந்...

“தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளில் மறைந்து கருத்து வெளியிடல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் உரிமையை ஒடுக்குதல் ஆகாது” என தலைப்பிட்டு இந்த கடிதம் அனுப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை இலங்கையை விட சிறப்பாக கட்டுப்படுத்தியுள்ள நாடுகள் எந்தவகையிலும் இத்தகைய ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதை சுட்டிக்காட்டியே இந்தக் கடிதம் அனுப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்ததாக கூறி பேராதனை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டமை, சமூக வலைத்தளங்கள் ஊடாக கருத்துக்களை வெளியிடுவோரைக் கைது செய்வதன் ஊடாகவும் பொலிஸார் பொதுமக்களை அச்சுறுத்துவதாகவும், ஒடுக்குதல் முறைமைகள் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதையே காட்டுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிவில் அமைப்புக்கள், நாட்டு மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்குமாறும் சுட்டிக்காட்டியுள்ளன.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

‘தங்களுக்கு நியாயமான நிவாரணம் கிடைக்கவில்லை என கம்பளை பகுதியில் தொலுவ மக்கள் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

அதன் பின்னர் அவ்வார்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக பேராதெனிய பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அவர் கடந்த 10ஆம் திகதி கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோவிட் - 19 தொற்று நோய் பரவல் காரணமாக, அசௌகரியங்களை எதிர்நோக்கும் மக்கள் தமது கருத்துக்களை, எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை, தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் பறிக்கப்படுவதாக தெரிகிறது.

மேற்சொன்ன கைது கூட அத்தகைய நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம். கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிட்ட பலர் கைது செய்யப்பட்ட நிலையில், தொடர்ந்தும் அத்தகைய கைதுகள் இடம்பெறும் என உயர் பொலிஸ் அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக பிரசித்தமாகவே அச்சுறுத்துகின்றனர்.

நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் உரிய முகாமைத்துவத்திற்கு அப்பால் இடம்பெறும் போது மக்கள் எதிர்ப்புக்களை வெளியிட்டால் அவர்களை ஒடுக்குவதை விடுத்து அந்த எதிர்ப்புகளுக்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு தீர்வினையே பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான தொற்று நோய் பரவல் காலகட்டத்தில் நியாயமான அடிப்படைகளின் கீழ் பொதுமக்களின் சில உரிமைகள் மீறப்படுதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளமை தெளிவானதே. உதாரணமாக பொது மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமை இவ்வாறான சந்தர்ப்பங்களில் தடுக்கப்படுவது நியாயமானதே.

எனினும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், எதிர்ப்பு வெளிப்படுத்தல் சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக்குவது மிக அபாயகரமான நிலைமையாகும்.

இது சர்வாதிகார அறிகுறிகளுடன் கூடிய ஒரு அதிகார வர்க்க அரசாங்கத்தின் நடவடிக்கையாகும்.

இலங்கையை விட மிக சிறப்பாக கொரோனா பரவலை கட்டுப்படுத்திய எந்த நாடும், மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் செயற்படவில்லை.

தொலுவ பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, அப்பகுதி மக்கள் ஊடகங்கள் முன், தமக்கு அரசாங்கம் ஊடாக எந்த நிவாரணங்களும் கிடைப்பதில்லை என்பதையே கூறினர்.

அப்பகுதிக்கு கிடைக்கும் நிவாரணம் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரையே சென்றடைவதாக அவர்கள் கூறினர். தாம் பெரிதும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக அவர்கள் கூறினர்.

இவ்வாறான நிலைமை தொலுவ பகுதியில் மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளமை எமது அமைப்புக்களால் அவதானிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் கொடுக்கும் நிவாரணம், உரிய மக்களிடம் சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு தற்போதும் உள்ளது. அத்துடன் அத்தியாவசிய பொருட்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

அரச ஊழியர்களின் கடன் தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது என கூறப்பட்டாலும் அந்த வாக்குறுதி சரியாக நிறைவேற்றப்படவில்லை. மரக்கறி விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் திட்டங்களிலும் பாரிய குறைபாடுகள் உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மக்களிடையே, எதிர்ப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. அரசாங்கம் அவ்வாறான சந்தர்ப்பத்தில் கருத்துக்களையும் எதிர்ப்புக்களையும் ஒடுக்குவதை விடுத்து, அதற்கான காரணிகளை கண்டறிந்து உரிய தீர்வுகளை கொடுக்க வேண்டும்.

தமக்கு நியாயத்தை கோரி 03

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## கருத்துச் சுதந்...

ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள் கூட்டத்தை அரசாங்கம் தனது எதிராளிகளாக நோக்கக் கூடாது.

எனவே இந்த நிலைமையின்போது, கருத்து வெளிப்பாடு மற்றும் எதிர்ப்பினை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமையை பாதுகாக்குமாறும், ஒடுக்குதல் நடவடிக்கைகளுக்கு பதிலாக பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோருகின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## ஆட்டக்காரி...

யிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த இரண்டு நெல்வகைகளிலும் பெறப்படும் தீட்டுப்பச்சை அரிசி ஒரு கிலோ கிராமின் அதிகூடிய சில்லறை விலையாக 115 ரூபாய் நிர்ணயிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருக் கும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம், அரிசி ஆலை உரிமையாளர்கள் இணைந்து கலந்துரையாடியதன் பின்னர் இந்தக் கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த இரண்டு அரிசி வகைகளின் விலை ஒரு கிலோ கிராம் 140 தொடக்கம் 145 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தனிமைப்படுத்தப்...

ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீடுகளில் தனிமைப்பட்டிருந்த 37 பேர் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததையடுத்து சுகாதாரப் பகுதியினரால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்தமைக்கான சான்றிதழ்கள் சுகாதார பரிசோதகர் மற்றும் இராணுவத்தினர் ஆகியோரால் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கப்பட்டது

நாவற்குழி, கைதடி, மட்டுவில், கச்சாய், அல்லாரை ஆகிய இடங்களில் இவ்வாறு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தனித்தனியாக இராணுவம் பொலிஸ் ஆகியோரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

நேற்று முதல் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பும் தளர்த்தப்பட்டது

கச்சாய், அல்லாரை பகுதியிலிருந்து தேவாலய ஆராதனைகளில் கலந்து கொண்டவர்களுக்கு கொரோனாவை கண்டறியும் பரிசோதனைகளும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,114)

## அடுத்த இரு...

கட்டுப்படுத்த மேலும் இருவாரகாலம் போதுமானதாக இருக்கும். ஏப்ரல் மாத இறுதியுடன் நாட்டில் பல மாவட்டங்களில் ஊரடங்கு சட்டத்தை தளர்த்த முடியும் என அரசாங்கம் மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் "கோவிட்-19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இன்னும் எத்தனை நாட்கள் இவ்வாறான நிலைமைகள் முன்னெடுக்கப்படும் என்பதற்கு பதில் தெரிவித்த சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,

தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்கள் தவிர்ந்து ஏனையவர்கள் கொரோனா வைரஸ் தொடர்பில் பாதிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் இதுவரை தென்படாத வண்ணமே உள்ளதாக வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது அரசாங்கம் மற்றும் சுகாதார அதிகாரிகள் மக்களை பாதுகாக்க எடுத்த வேலைத்திட்டத்தின் பிரதிபலன் என்றே கூற வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் இப்போது நாம் முன்னெடுத்து வருகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நாம் முன்னெடுத்தால் மட்டுமே எம்மால் வெகு சீக்கிரமாக இந்த நிலைமைகளில் இருந்து விடுபட முடியும். எவ்வாறு இருப்பினும் இந்த மாத இறுதிக்குள் வெளி மாவட்டங்களில் ஊரடங்கு சட்டத்தை தளர்த்த முடியும் என்ற நிலைப்பாடும் உள்ளது.

ஆகவே அடுத்த இரண்டு வார காலம் மக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி செயற்பட வேண்டியது கட்டாயமாகும் என்றார். (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| நோய்த் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 154 | 217 | 056 | 007 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 1,909,418 | 440,273 | 118,504 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 1,909,418 | 57,161 | 118,504 | +4,310 |
| ஐ.அமெரிக்கா | 577,332 | 17,032 | 23,077 | +972 |
| இத்தாலி | 159,516 | 3,153 | 20,465 | +566 |
| ஸ்பெயின் | 169,496 | 2,665 | 17,489 | +280 |
| சீனா | 82,160 | 108 | 3,341 | +2 |
| ஜேர்மனி | 128,208 | 354 | 3,043 | +21 |
| பிரான்ஸ் | 136,779 | 4,188 | 14,967 | +574 |
| ஈரான் | 73,303 | 1,617 | 4,585 | +111 |
| ஐ.இராச்சியம் | 88,621 | 4,342 | 11,329 | +717 |
| இந்தியா | 10,453 | 1,248 | 358 | +27 |

இன்று அதிகாலை 12.10 நிலைவரப்படி

> எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.
>
> – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுத்தோட்டம் செய்கின்ற முயற்சியில் ஈடுபடுவோம்

தமிழ் – சிங்கள புத்தாண்டு பிறந்துள்ளது.

புதிய புத்தாண்டில் நடப்பவை அனைத்தும் நல்லதாக நடக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக.

எங்கள் பிரார்த்தனை, உலகத்தை உலுக்கி நிற்கின்ற கொரோனாத் தொற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்காகவும் அமையட்டும்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக உலகில் ஏற்பட்டிருக்கின்ற துன்பம் ஒருபுறமிருக்க, அந்த நோயின் கொடூரம் முற்றுப் பெறாவிட்டால், உலகப் பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இப்போது நம் நாட்டில் மக்கள் வெளியில் நடமாடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறதேயன்றி, பொருட்தட்டுப்பாடு நிலைமை இன்னமும் ஏற்படவில்லை.

தவிர, ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனநிலை கொண்ட தனிநபர்களின் பரோபகாரத்தில் நிவாரணப் பொருட்களும் ஓரளவுக்குக் கிடைக்கப் பெறுகிறது.

இதற்கு மேலாக அரசாங்கத்தின் சமுர்த்திக் கொடுப்பனவுகளும் முதியவர்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளும் நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்கின்றது என்ற வகையில் ஆறுதல் அடைய முடியும்.

ஆனால் கொரோனாத் தொற்று முற்றுப் பெறாமல் நிலைமை நீண்டு செல்லுமாக இருந்தால், பொருட் தட்டுப்பாடுகளும் விலையேற்றங்களும் அதிகரிப்பதுடன் தனிநபர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உதவித் திட்டங்களும் வலுக்குறையத் தொடங்கி விடும்.

இத்தகைய நிலைமையானது வறுமை, பஞ்சம், பசி என்ற மிக மோசமான சூழமைக்கு மக்களை இட்டுச் செல்லும்.

எனவே இது விடயத்தில் நாம் ஒவ்வொருவரும் விழிப்பாகவும் தூர நோக்குடனும் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதிலும் உலக நாடுகளில் கொரோனாத் தொற்று கட்டுக்கடங்காமல் கோரத்தாண்டவம் ஆடுமாக இருந்தால் வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதி என்பது சாத்தியப்படாமல் போகும்.

அத்தகையதொரு நிலைமை ஆபத்தானதாக அமையும் என்பதை நாம் தெரிந்து வைத்திருப்பது கட்டாயமானது.

எனவே கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு காலத்தில் வீட்டுத்தோட்டம் செய்கின்ற ஒரு நல்ல கருமத்தை நாம் பழகிக் கொள்வதும் பின்பற்றுவதும் என்றும் எமக்குக் கைகொடுப்பதாகும்.

ஆம், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் வீடுகள் தோறும் வழங்கப்பட்ட தென்னங்கன்றுகளை வீட்டு வளவில் நட்டு தண்ணீர் ஊற்றி அதனை பராமரித்து வளர்த்தவர்கள் இப்போது தம் வீட்டுக்குத் தேவையான தேங்காய்களை தங்கள் வளவிலேயே பெற்றுக் கொள்கின்றனர் எனும் போது அதற்குள் இருக்கக் கூடிய திருப்தியும் மகிழ்ச்சியும் வேறு எங்கும் பெற்றுக் கொள்ள முடியாதது.

எனவே உடற்பயிற்சிக்காக விடிகாலைப் பொழுதிலும் மாலை வேளையிலும் வீதியோரமாக வேக நடை புரிகின்றவர்கள்; விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி செய்கின்றவர்கள்; அரச பணியாளர்கள்; மாணவர்கள் என ஒட்டுமொத்த மக்களும் தங்களின் உணவுக்குத் தேவையான மரக்கறி வகைகளையும் பழ வகைகளையும் தங்கள் வீட்டு வளவிலேயே உற்பத்தி செய்ய முன்வர வேண்டும்.

நம் வீட்டு வளவில் காய்த்த கத்தரி, முருங்கை, வெண்டி, பயிற்றை, பச்சை மிளகாய், வல்லாரை இவற்றைச் சமைத்துச் சாப்பிடுகின்ற மனநிலை நூறு ஆண்டுகள் நோயற்ற ஆயுள் என்ற மிக உன்னதமான வாழ்வைத் தரும் என்பது சர்வ நிச்சயம்.

# உற்ற நேரத்தில் உதவிய கரங்கள்



வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மிகவும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 14 குடும்பங்கள் உள்ளிட்ட 15 குடும்பங்களுக்கு ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தினூடாக உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா, தோனிக்கல், நொச்சி மோட்டை, கற்குளி ஆகிய இடங்களில், தற்போதைய இடர் காலத்தில் தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாது தவித்துவந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், ஆதரவற்ற முதியோர் குடும்பம் என தெரிவு செய்யப்பட்ட 14 குடும்பங்களுக்கும் தலா 3,000 பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்தபகுதியைச் சேர்ந்த முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சி.ஜெயராஜ் விடுத்த வேண்டுகோளை ஏற்று சுயாதீன ஊடகவியலாளரும், சமூக செயற்பாட்டாளருமான இரா.மயூதரனின் ஏற்பாட்டில், மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தை சேர்ந்த கனடாவில் வசித்து வரும் க.சுரேந்திரனின் நிதி பங்களிப்பில் இவ் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



வலி தெற்கு பிரதேச சபையின் தலைவர் க.தர்சனால் பிரதேச சபையில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சுகாதார தொழிலாளர் பொதுச்சுகாதார பரிசோத கர்களின் அறிவுறுத்தல்களின் கீழ் தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றனர். ஆகையால் வலி தெற்கு பிரதேச சபையில் பணி யாற்றும் சுகாதார தொழிலாளர்களின் குடும்பங்களின் நலன் கருதி ஒரு தொகுதி உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இணுவில் கிராம எழுச்சியகத்தின் தலைவர் காந்தனின் நிதிப் பங்களிப்பின் மூலமே குறித்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இவற்றை தவிசாளரோடு பொதுச்சுகாதார பரிசோதகர்களும் இணைந்து வழங்கி வைத்தனர்.

கேப்பாப்பிலவு, வற்றாப்பளைக் கிராமங்களில் 40 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் சுசீலன் பௌண்டேசன் ஊடாக 05.04.2020 அன்று வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் முள்ளிவாய்க்கால்ப் பகுதியில் பொதிகள் கிடைக்காத குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு சுசீலன் பௌண்டேசன் ஊடாக உலர் உணவுப் பொதிகள் 06. 04.2020 அன்று வழங்கி வைக்கப்பட்டன.

சுசீலன் பௌண்டேசனின் இடர்கால கொடுப்பனவு வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாமூலை, முறிப்பு, குமாரபுரம் மற்றும் கேப்பாபிலவுப் பகுதிகளில் 120 குடும்பங்களுக்கு 1000 ரூபா பெறுமதியான பொதிகள் 10,11 ஆம் திகதிகளில் வழங்கி வைக்கப்பட்டன.



திருமறைக் கலாமன்றம் கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளால் தொடராக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற ஊரடங்கால் தமது தொழில்களை இழந்து வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு உலர் உணவுப்பொருட்களை வழங்கும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக யாழ்.பிரதேச செயலகத்திற் குட்பட்ட பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இச்செயற்பாடு 10.04.2020 காலை மணியம் தோட்டப் பகுதியில் இடம்பெற்றது. இதன் போது அப்பிரதேச கிராம உத்தியோ கத்தரும் உடனிருந்தார்.

சமூக செயற்பாட்டாளர் சோபா மற்றும் புலம்பெயர் தேசத்தில் உள்ள அவரது உறவினர்களின் நிதியுதவியில் கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



கிளிநெச்சியில் கணேசபுரம், உருத்திரபுரம் வடக்கு, திருநகர் தெற்கு, சாந்தபுரம், பாரதிபுரம், அறிவியல்நகர் போன்ற கிராமங்களில் உள்ளதெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கே இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

முதற்கட்டமாக 25 வரையான குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா பெறு மதியான உலர் உணவுப் பொதிகளே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





வேலணை மேற்கு சிற்பனை ஸ்ரீ டிமுருகன் சனசமூக நிலையத்தினால் ஆளுகைக்குட்பட்ட வேலணை மேற்கு 6 ,7 ,8 ம் வட்டாரத்தில் வசிக்கின்ற 250 குடும்பங்களுக்கு ரூபா.450000 பெறு மதியான உலர் உணவுப்பொருட்கள் 12.04.2020 அ ன்று வழங்கிவைக்கப்பட் டன. இவ்வேலைத் திட்டமானது. விஸ் வநாதன் செல்வநாத ன்(யு.கே) விஸ் வநாதன் ரகுநாதன் (யு.கே) திருச்செல்வம் மதிவண்ணன்(யு.கே) ஆகி யோரின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்டன.

காரைநகர் சடையாளி ஞானவைரவர் அறக் கட்டளை, தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் அறக் கட்டளை, சண்டிலிப்பாய் அம்பாள் அறக்கட்டளை, கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலய முன்றல், சுதுமலை வைரவர் ஆலய முன்றல், திருநெல்வேலி (தலங்காவில்) பிள்ளையார் முன்றல், உரும்பிராய் ஞான வைரவர் ஆலயம் ஆகிய பகுதிகளில் தலா 1000 ரூபா பெறுமதியான 200 உணவுப் பொதிகள் கடந்த 2,3 ஆம் திகதிகளில் வழங்கிவைக்கபட்டன.

இச்செயற்பாடானது போசகரான பொறியியலாளர் ஞானசந்திரமூர்த்தி சின்னையா மூலமும் புலம்பெயர்வாழ்மக்களின் நிதியுதவி மூலமும் நடைபெற்றது.




வடமராட்சியில் திக்கம், சக்கோட்டை பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொதிகள் 12.04.2020 அன்று நீலன் அறக்கட்டளையால் வழங்கி வைக்கப்பட்டன.

ஜனனம் பவுண்டேஷன் தலைவர் ஜனகன் விநாயகமூர்த்தியின் நிதியுதவியில் நீலன் அறக்கட்டளையின் மேலாளர் ராயு ஒழுங்குபடுத்தலின் கீழ் சக்கோட்டை, திக்கம் மற்றும் தென்மராட்சி மிருசுவில் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 65 குடும்பங்களிற்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



# சித்திரை புத்தாண்டு நாளில் வீடுகளிலிருந்து அமைதியாகப் பிரார்த்தனை செய்யுங்கள்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

இதுவொரு இக்கட்டான காலகட்டம், சில நடைமுறைகளை நாம் கைக்கொள்வதால் தான் எங்களையும், எங்களைச் சுற்றியுள்ள உறவுகளையும் காப்பாற்ற முடியுமென்பதை உணர்ந்து அனைவரும் இம்முறை சித்திரைப் புத்தாண்டு நாளில் வீடுகளிலிருந்து அமைதியாகப் பிரார்த்தனை செய்யுங்கள்.

இம்முறை சித்திரைப் புத்தாண்டு தினத்தில் கொடிய கொரோனா நோயிலிருந்து உலகம் விடுபட வேண்டுமென்பதற்கான சகல மக்களுக்கான பிரார்த்தனையாக, உலக மக்களுக்கான பிரார்த்தனையாக வீடுகள் ஒவ்வொன்றிலும் அமைதியாக விளக்கேற்றி வழிபாடு செய்யுங்கள் என தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சைவத்தமிழ் மக்களிடம் வேண்டுகோள்விடுத்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சைவத்தமிழ் மக்களுக்கு அவர் விடுத்த வேண்டுகோளிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைவத் தமிழ் மக்கள் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கின்ற சித்திரைப் புத்தாண்டு இம்முறை அமைதியாக வீடுகளிலிருந்து பிராத்தனை செய்ய வேண்டிய நாளாக நாம் கருத்தில் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா என்கின்ற கொடிய நோயால் மக்கள் அவஸ்தைப்படுகின்ற இந்த வேளையில் வீதிகளில், ஆலயங்களில், பொது வைபவங்களில் மக்கள் கூடுவது ஆபத்தானது என்பதை மருத்துவ சமூகமும், மனித நேயத்தைப் பேணுகின்ற அனைத்துச் சமூகங்களும் அறிவித்த பின்னர் நாங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாக எங்கள் வாழ்வை நெறிப்படுத்த வேண்டிய தேவையுண்டு.

புத்தாண்டு நாளை மகிழ்ச்சியாக கொண்டாடுகின்றதொரு நாளென நாம் கருதினாலும் காலச் சூழலையும் கால தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்டு நாம் எமது வீடுகளிலேயே இந்த நாளை மிகவும் பக்குவமாக கழிக்க வேண்டும்.

எனவே,கோயில்களுக்குத் தான் சென்று தெய்வ தரிசனம் மேற்கொள்ள வேண்டுமெனக் கருதி விடாதீர்கள்.

உங்களால் மற்றவர்களுக்கும் இடையூறு ஏற்படாமல் வீடுகளிலேயேயிருந்து நன்றாகப் பிரார்த்தனை செய்யுங்கள்.

உலகத்தின் பல பாகங்களிலும் கண்ணீருடன் மக்கள் காத்திருக்கின்றனர். மூச்சு விடுவதற்கு முடியாமல் இலட்சக்கணக்கான நோயாளர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். பரிதாபமான இந்தச் சூழலில் நாங்கள் மிகவும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். வைத்திய உலகம் மிகவும் மன்றாட்டமாக வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அதற்கு நாங்கள் மதிப்பளித்து எங்களையும் சமுதாயத்தையும் காப்பாற்றுகின்ற வகையில் வீடுகளிலேயேயிருந்து பிரார்த்தனை செய்வோம்.

புதிய ஆண்டு பிறக்கின்ற போது புத்தாடை அணியவில்லை, கோயிலுக்குச் செல்லவில்லை, நண்பர்கள், உறவினர்களுடன் உறவு கொண்டாடவில்லையென அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு விடாதீர்கள். காலத்திற்கென்றொரு தர்மமுண்டு. இன்று நாங்கள் வாழ்கின்ற காலச் சூழ்நிலையை உணர்ந்து அவற்றைச் சரியான முறையில் பேணுவதற்கு நாங்கள் வீடுகளிலேயே தங்கியிருந்து வழிபாடு செய்வதுதான் ஒழுங்கு.

எல்லாவற்றையும் கடந்தது தான் கடவுள். கடவுளுக்குத் தெரியும் இன்றைய எங்கள் நிலைமை. எனவே, வழிபாட்டிற்குச் செல்லாமையால் இறைவன் கோபித்து விடுவான் என்ற அறியாமையுடன் நாங்கள் செயற்படக் கூடாது. எங்களை ஆளுகின்ற, காக்கின்ற இறைவன் எங்கிருந்து நாம் வழிபட்டாலும் எங்களை நோக்கி வருவான் என்பது தான் உண்மை.

பெற்றோர்களை, எங்களை ஆளாக்கியவர்களை, எங்கள் மூதாதையர்களை நினைந்து வழிபாடு செய்யுங்கள். இந்த மண்ணை நினைந்தும், மக்களை நினைந்தும் வழிபாடு செய்யுங்கள். இரவு, பகலென்று பாராது தம் உயிரைத் துச்சமாக மதித்து மருத்துவப் பணி செய்யும் மருத்துவ சமுதாயத்தின் தொண்டை நினைந்து அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். அதேபோன்று ,ந்த அவசர காலச் சூழலில் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செயற்படும் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் , சமூக நிறுவனங்களின் பணியாளர்கள் அனைவருக்காகவும் நன்றியுடன் பிரார்த்தனை செய்யுங்கள்.

பசியுடனும், வறுமை எனும் போராட்டத்துடனும் எத்தனையோ பேரிருக்கிறார்கள். அவர்களனைவரையும் ஒரு கணம் நினையுங்கள். நீங்கள் பலபேர் செய்துள்ள உதவிகளால் அரைவயிற்றையாவது போக்குகின்ற வாழ்வு எங்கள் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

எங்களுக்கு இக்கட்டான காலகட்டத்தில் உதவியவர்கள் புலம்பெயர் தேசத்து மக்கள். அவர்கள் கொரோனா நோய்த் தாக்கம் காரணமாக மிகுந்த அச்சத்துடனும், மருத்துவம் செய்ய முடியாத நிலையிலும் வாழ்கிறார்கள். அத்தகைய மக்களையும், அவர்கள் எமக்குச் செய்த மறக்க முடியாத உதவிகளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்ப்பதுடன் அவர்களுக்காகவும் பிரார்த்திப்போம்.

புலம்பெயர் தேசங்களில் நம்மவர்கள் கொரோனாத் தொற்றுக் காரணமாக இறப்பைச் சந்தித்திருக்கின்ற விபரங்கள் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருப்பது கவலையைத் தருகிறது. இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் குளிரிலும், பனியிலும் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் தன் உறவுகளுக்காகவும், ஆதரவற்ற பிள்ளைகளுக்காகவும் , தங்கள் குலதெய்வக் கோயில்களுக்காகவும் நாளும் பொழுதும் தம் உழைப்பில் ஒரு பகுதியைக் கொடுத்து எத்தனையோ பேரை வாழ்வித்த புலம்பெயர் சமூகம் தற்போது அச்சத்துடன் காணப்படுவது வேதனையைத் தருகிறது.

திடீரென்று இத்தகைய சூழல் வருகின்ற போது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு கடவுள் தந்த சந்தர்ப்பமாக இந்தச் சந்தர்ப்பத்தைக் கருதி நாம் ஒவ்வொருவரும் செயற்படுவோம். உணவைக் கொட்டாதீர்கள். பணத்தை, தண்ணீரை வீண் விரயம் செய்யாதீர்கள். பகையை வளர்க்காதீர்கள்.

இளைய சமுதாயம் எக்காரணம் கொண்டும் வீதிக்கு வராதீர்கள். வீண் பொழுது போக்க முயற்சி செய்யாதீர்கள். ஊரடங்கு வேளையான தற்போது நீங்கள் வீதிக்கு வந்து பாதுகாப்புத் துறையினரிடம் மாட்டிப் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் வேதனையை ஏற்படுத்தாமல் மிகப் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# வவுனியா அந்தணர் ஒன்றியத்தால் முல்லை.வைத்தியசாலைக்கு உதவி



(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் மருத்துவத் துறையினரின் நலன் கருதி வவுனியா அந்தணர் ஒன்றியத்தால் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு நேற்றுக்காலை உதவிகள் வழங்கப்பட்டன.

கொரோனா வைரஸ் நோய்ப் பரவலால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் முகக்கவசங்களுக்குத் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில்

வவுனியா அந்தணர் ஒன்றியமானது கனடா இந்துக் குருமார் ஒன்றியத்தின் அனுசரணையில் முல்லைத்தீவு அந்தணர் ஒன்றியத்தின் ஊடாக வைத்தியசாலை பயன்பாட்டுக்காக சுவாச கவசங்களை வழங்கியது.

இவ் உதவிகளை அந்தணர் ஒன்றியத்தின் உப தலைவர் பிரபாகர குருக்கள் தலைமையில் சி. திவாகரக் குருக்கள், ஜெ.செந்தில்நாதக் குருக்கள் ஆகியோர் இணைந்து பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் வழங்கினர். (இ-299)

# இராணுவத் தளபதி கிளிநொச்சிக்கு விஜயம்

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இராணுவத்தினரின் பணிகளைப் பாராட்டும் நோக்கில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

காலை மாங்குளம் பகுதிக்கு விஜயம்மேற்கொண்டிருந்த அவர் மாலை கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தில் இராணுவத்தினருடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

கொரோனா வை ரஸ் தொற்று காரணமாக படையினர் நீண்ட காலமாக வீடு களுக்கு விடுமுறையில் செல்லாது அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றமையைப் பாராட்டும் வகையிலும், அவர்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையிலும் வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் பலவற்றுக்கும் இராணுவத் தளபதி விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.(இ)



# "சார்வரி" வருஷ வருஷப்பிறப்பு கருமம்

## திருக்கணித பஞ்சாங்கம்

நிகழும் மங்களகரமான விகாரி வருஷம் பங்குனி மாதம் 31ம் திகதி (13/04/2020) திங்கட்கிழமை முன்னிரவு 8.23 மணிக்கு பூராடம் முதலாம் பாதத்தில், விருச்சிக லக்கணத்தில் சார்வரி எனும் புதிய வருஷம் பிறக்கின்றது.

### விஷு புண்ணிய காலம்

13/04/2020 திங்கட்கிழமை அன்று மாலை 4.23 மணி தொடக்கம் பின்னிரவு 12.23 மணிவரையுள்ள காலமாகும்.

## கைவிசேஷம்

| | |
|---|---|
| 14/04/2020 செவ்வாய் அதிகாலை (13/04/2020 திங்கள் பின்னிரவு) | - 5.20 - 5.50 மணிவரை |
| 16/04/2020 வியாழன் முன்னிரவு | - 7.00 - 8.00 மணிவரை |
| 16/04/2020 வியாழன் முன்னிரவு | - 10.25 - 11.30 மணிவரை |

## வாக்கிய பஞ்சாங்கம்

நிகழும் விகாரி வருஷம் பங்குனி மாதம் 31ம் திகதி (13.04.2020) திங்கட்கிழமை முன்னிரவு 7.26 மணிக்கு அபரபக்க சஷ்டி திதியில் மூல நட்சத்திரத்தின் 4ம் பாதத்தில், பரிகம் நாம யோகத்தில், வணிசக் கரணத்தில், துலா லக்கினத்தில், கும்ப நவாம்சத்தில், புதன் காலவோரையில், குரு சூக்கும வோரையில், தாமத குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய கோழி உண்டித் தொழிலும் சூக்கும பட்சி நடைத்தொழிலும், செய்யும் காலத்தில் இப்புதிய "சார்வரி" என்னும் புதிய வருஷம் பிறக்கின்றது.

அன்று பிற்பகல் 3.26 மணி முதல் அன்று முன்னிரவு 11.26 மணி வரை விஷேச புண்ணிய காலம் ஆகும். இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் இலவமிலையும், காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து பட்டுப்போன்ற வெண்மையான பட்டாடையாயினும், வெள்ளைக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து வைரம் முதலியவற்றாலாகிய ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்னேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தருமங்களாற்றி, குரு, பெற்றோர் முதலிய பெரியாரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று, உற்றார் நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உணவுடன் தயிர்ச்சோறு, உப்புச்சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதிய வருஷ பலன்களை வாசித்தும், கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களை பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனஞ் செய்க.

மறுநாளாகிய செவ்வாய்க்கிழமை (14/4/2020) வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தாம் முன் செய்தவைகளையும் மேற்செயற்பாடுகளாகிய அறம், பொருள், இன்பங்களையும் சிந்தித்து, கண்ணாடி தீபம் நிறைகுடம் தன் வலக்கையான தாய் தந்தை ஆசிரியரின் பாதம் தேவதைகளின் திருவுருவம், திருமுறைப்புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை பாக்கு முதலிய மங்கலப்பொருட்களை தரிசித்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து தங்கள் வீடுகளிலே சூரியனுக்கு பொங்கல், பூஜை வழிபாடு செய்து முன்போலப் போசன புஷண தான தருமங்களாற்றி மங்களகரமாக வாழக் கடவர்.

### மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழு நீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பலி, சுக்கு இவைகளை சுத்தமான ஜலத்தில் இட்டு காய்ச்சி கொள்க.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

அச்சுவினி, கார்த்திகை 2,3,4ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் கால்கள், மகம், மூலம், பூராடம், உத்தராடம் 1ம் கால் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களைச்செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

## கைவிசேஷம்

| | |
|---|---|
| 16/04/2020 வியாழன் இரவு | - 10.37 - 12.23 மணிவரை |
| 16/04/2020 வியாழன் பின்னிரவு | - 3.08 - 4.04 மணிவரை |
| 16/04/2020 வியாழன் பின்னிரவு | - 4.16 - 5.47 மணிவரை |
| 20/04/202 திங்கள் பிற்பகல் | - 12.06 - 1.46 மணிவரை |

# கொரோனாத் தொற்றுப் பாதிப்பிலிருந்து 4 இலட்சத்து 24 ஆயிரம் பேர் மீண்டனர்

## 50 ஆயிரம் பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடம்

(ஜெனிவா)

உலகம் முழுவதும் 210 நாடுகளில் கொரோனா வைரஸ் பரவியுள்ள நிலையில், இந்த வைரஸின் பாதிப்பிலிருந்து சுமார் 4 இலட்சத்து 24 இலட்சம் பேர் மீண்டனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் பரவி மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

தடுப்பு மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனா வைரஸின் தாக்கம் எப்போது தணியும் என்று கணிக்க முடியாத நிலை உள்ளது.



இந்நிலையில் நேற்றுக் காலை நிலவரப்படி உலகம் முழுவதும் 18 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மேல் வைரஸ் தாக்கம் உறுதி செய்யப்பட்டது.

வைரஸ் தாக்குதலுக்கு இது வரை ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழுந்தனர். 4 இலட்சத்து 23 ஆயிரத்து 625 பேர் குணமடைந்தனர்.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 13 இலட்சத்து 15 ஆயிரத்து 283 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 50 ஆயிரத்து 853 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா வைரஸால் ஏற்பட்ட உயிரிழப்புக்களில் அமெரிக்கா, முதலிடத்தில் உள்ளது. அங்கு 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர். அடுத்த நிலைகளில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன், ஈரான், சீனா உள்ளிட்ட நாடுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சோமாலியாவில் கொரோனாவுக்கு நீதியமைச்சர் பலி



(மொகதி)

சோமாலியாவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இலக்காகி மாகாண நீதியமைச்சர் உயிரிழந்தார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்குப் பரவியது. உலகம் முழுவதும் 18 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மேல் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேருக்கு மேல் பலியாகினர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் ஐரோப்பா, அமெரிக்காவைத் தொடர்ந்து தற்போது ஆபிரிக்க நாடுகளைக்கும் பரவத் தொடங்கியது. கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் இது வரை 21 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதற்கிடையில், அந்நாட்டின் ஹீரஷபெலி மாகாணத்தின் நீதியமைச்சர் ஹலீப் மம்மின் டூஹவ் (வயது-58) கடந்த பெப்ரவரி மாதம் இங்கிலாந்து சென்று நாடு திரும்பினார்.

இதைத்தொடர்ந்து, கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டுவந்த டூஹவ், ஜோஹர் நகரிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்குக் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை வெளியான பரிசோதனை முடிவில் டூஹவ்க்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்புடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மாகாண நீதியமைச்சர் டூஹவ் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால், சோமாலியாவில் கொரோனாவுக்குப் பலியானோர் எண்ணிக்கை 2 ஆக அதிகரித்தது. (இ)

# ஊரடங்கை மீறிய வெளிநாட்டவர்கள் "என்னை மன்னித்து விடுங்கள்" என்று 500 முறை எழுத வைத்த பொலிஸார்

(டேராடூன்)

இந்தியாவின் உத்தரகாண்டில் ஊரடங்கு உத்தரவை மீறிச் சுற்றித்திருந்த வெளிநாட்டவர்களைப் பிடித்த பொலிஸார் அவர்களை "என்னை மன்னித்து விடுங்கள்" என்று 500 முறை எழுத வைத்து நூதன தண்டனை வழங்கினர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. நாடு முழுவதும் 8 ஆயிரம் பேருக்கு மேல் வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 273 பேர் உயிரிழுந்தனர்.

இதற்கிடையில் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை 21 நாட்களுக்கு நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.



இந்த ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய தேவைகளைத் தவிர மக்கள் யாரும் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால் மக்கள் தங்கள் வீடுகளில் தஞ்சமடைந்தனர். ஆனால், பொது மக்களில் சிலர் ஊரடங்கை மீறி அத்தியாவசிய காரணங்கள் அல்லாமல் வீதிகளிலும் பொது இடங்களிலும் பயணித்துவருகின்றனர்.

அவ்வாறு ஊரடங்கை மீறுபவர்களைப் பிடிக்கும் பொலிஸார் அவர்கள் மீது குற்றங்களுக்கு ஏற்ப வழக்குகளும் பதிவு செய்து சிறையில் அடைக்கின்றனர்.

அதேபோன்று சில சமயங்களில் ஊடரங்கை மீறுபவர்களுக்கு பொலிஸார் நூதன தண்டனைகளும் வழங்குகின்றனர்.



அவ்வாறான ஒரு சம்பவம் உத்தரகாண்ட் மாநிலத்தில் அரங்கேறியது. ஆனால், அங்கு ஊரடங்கை மீறியவர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஆவர்.

உத்தரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷ் நகரில் பாயும் கங்கை நதிக்கரையோரம் நேற்று முன்தினம் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 10 பேர் ஊரடங்கு உத்தரவை மீறிக் கங்கை நதிக்கரையோரம் சுற்றித்திரிந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர். அவர்களைப் பிடித்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் வெளிநாட்டினர் 10 பேரும் ஊரடங்கை மீறி கங்கையை சுற்றிப்பார்க்க வந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து,ஊரடங்கை மீறிய வெளிநாட்டினர் 10 பேரிடமும் "நான் ஊரடங்கு விதிகளைப் பின்பற்றவில்லை, என்னை மன்னித்து விடுங்கள்" என 500 முறை எழுதச்சொல்லி நூதன தண்டனை வழங்கினர்.

தாங்கள் செய்த தவறை உணர்ந்த வெளிநாட்டினர் அனைவரும் தனித்தனியாக பொலிஸார் வழங்கிய இந்தத் தண்டனையை ஏற்று 500 முறை "நான் ஊரடங்கு விதிகளை பின்பற்றவில்லை, என்னை மன்னித்து விடுங்கள்' என எழுதிக் கொடுத்தனர். இதனையடுத்து அந்த வெளிநாட்டவர்களை பொலிஸார் எச்சரித்து அனுப்பினர். (இ)

# அமெ.போர்க்கப்பலில் கொரோனா பாதிப்பு 550 ஆக உயர்வு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் தியோடர் ரூஸ்வெல்ட் கப்பலில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 550 ஆக அதிகரித்தது.

இது குறித்து அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், "கப்பலில் 92 சதவீதம் பேருக்குக் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.இதில் 550 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், 3,673 பேருக்குக் கொரோனா பாதிப்பு இல்லை என்பது தெரியவந்தது" எனக் கூறினார். (இ)

# அமெரிக்காவில் ஆயிரத்து 500 பேர் ஒரேநாளில் மரணம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் ஆயிரத்து 528 பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பிய நாடுகளை கடந்து தற்போது அமெரிக்காவில் நிலைகொண்டுள்ளது.



உலகளவில் வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கையிலும், உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகளின் பட்டியலிலும் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில்நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் புதிதாக 22 ஆயிரத்து 105 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் வைரஸ் தாக்குதலுக்கு ஆயிரத்து 528 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 22 ஆயிரத்து 105 ஆக அதிகரித்தது. (இ)

# ஐரோப்பாவில் கொரோனா பலி 75 ஆயிரத்தைத் தாண்டியது!



(ஜெனிவா)
கொரோனா வைரஸ்க்கு ஐரோப்பாவில் பலியானவர்கள் எண்ணிக்கை 75 ஆயிரத்தைக் கடந்தது. இதில் 80 சதவீதத்தினர் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளில் இறந்தனர்.

ஸ்பெயினில் 17 ஆயிரத்து 209 பேரும் பிரான்ஸில் 14 ஆயிரத்து 393 நபர்களும் இங்கிலாந்தில் 10 ஆயிரத்து 612 பேரும் ,த்தாலியில் 19 ஆயிரத்து 899 பேரும் நேற்றுக் காலை வரை கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்தனர்.

நேற்றுக் காலை நிலவரப்படி ஐரோப்பாவில் மொத்தம் 9 இலட்சத்து 50 ஆயிரத்தைத் தாண்டி பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சென்று கொண்டிருந்தது. (இ)

# கொரோனாவால் இந்தியாவில் உயிரிழப்பு 308 ஆக உயர்வு

## 9 ஆயிரத்து 152 பேர் பாதிப்பு

(டில்லி)
இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 152 ஆக அதிகரித்தது. பலி எண்ணிக்கை 308 ஆக உயர்ந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. எனவே ஊரடங்கு உத்தரவு நீடிக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 152 ஆக உயர்ந்தது. நேற்றுக்காலை 8 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 35 பேர் மரணமடைந்தனர். இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 308 ஆக உயர்ந்தது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 856 ஆக அதிகரித்தது.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிராவில் 1985 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 149 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் 1043 பேருக்கும், டில்லியில் 1154 பேருக்கும், ராஜஸ்தானில் 804 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 564 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 483 பேருக்கும், தெலுங்கானாவில் 504 பேருக்கும், கேரளாவில் 376 பேருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. (இ)

# நம்பிக்கையைப் பரப்பும் தூதுவர்களாக மாறுங்கள்

## மக்களுக்கு போப்பாண்டவர் அறிவுரை

(வாடிகன் சிற்றி)
கொரோனா பற்றிய அச்சத்திற்கு அடிபணியாமல், நம்பிக்கையைப் பரப்பும் தூதுவர்களாக மாறுங்கள் என மக்களுக்கு போப்பாண்டவர் பிரான்சிஸ் அறிவுரை வழங்கினார்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினத்தை ஈஸ்டர் திருநாளாக ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகின்றனர்.

எனினும்கொரோனா வைரஸ் காரணமாக உலகின் பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் ஈஸ்டர் தினக் கொண்டாட்டங்கள் களையிழந்தன.

இந்நிலையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையிடமான வாடிகன் சிற்றியில் நேற்று முன்தினம் போப்பாண்டவர் பிரான்சிஸ் ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு சிறப்புப் பிரார்த்தனை நடத்தினார்.

ஒவ்வொரு ஆண்டும் வாடிகன் சிற்றியிலுள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் நடைபெறும் இந்தச் சிறப்புப் பிரார்த்தனையில் உலகங்கிலும் இருந்து ஆயிரக் கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பங்கேற்பது வழக்கம்.

ஆனால், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வாடிகன் சிற்றியில் மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், நேற்று முன்தினம் பிரார்த்தனைக்கு மக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

மூத்த கர்தினால்கள் உட்பட 12 பேர் மட்டும் போப்பாண்டவர் பிரான்சிஸ் தலைமையிலான பிரார்த்தனையில் பங்கேற்றனர். மேலும் ஞானஸ்தானம் உள்ளிட்ட வழக்கமான மதச் சடங்குகள் கைவிடப்பட்டன.

அதே வேளை போப்பாண்டவர் பிரான்சிஸ் பிரார்த்தனை நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. பிரார்த்தனையின் முடிவில் போப்பாண்டவர் மக்களுக்கு உரையாற்றினார்.

"எதிர்காலத்தைப் பற்றியும், மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய அனைத்தையும் பற்றியும் பயம் உள்ளது. இது ஒரு வேதனையான நினைவு. இருண்ட நேரம். நமது நம்பிக்கை குறைக்கப்படுகிறது. இவை அனைத்தும் உண்மைதான்.

ஆனால், இந்தத் தருணத்தில் கடவுள் நமக்கு திரும்பத் திரும்ப சொல்லும் வார்த்தைகள் இவைதான். "பயப்படாதீர்கள், பயப்பட வேண்டாம்." இது இன்று நமக்கு உரைக்கப்படும் நம்பிக்கையின் செய்தி.

எனவே, மக்கள் கொரோனா பற்றிய அச்சத்திற்கு அடிபணிய



வேண்டாம். மாறாக இந்த நேரத்தில் மற்றவர்களுக்கு நம்பிக்கையைப் பரப்பும் தூதுவர்களாக மாற வேண்டும்.

மரணத்தின் அழுகைகளை மௌனமாக்குவோம். இனி போர்கள் இல்லை என்ற நிலையை அடைய வேண்டும். ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும், ஆயுத வர்த்தகத்தையும் நிறுத்திவிட்டு ஏழைகளுக்கு உதவுவோம்.

ஏனெனில் மக்களுக்குத் தேவை உணவுகளே தவிர, உயிரைப் பறிக்கும் துப்பாக்கிகள் அல்ல. கருக்கலைப்பு மற்றும் அப்பாவி உயிர்களைக் கொல்வது முடிவுக்கு வரட்டும். எதுவும் இல்லாதவர்களின் வெற்றுக் கரங்களை நிரப்பப் போதுமானளவு வைத்திருப்பவர்களின் இதயங்கள் திறந்திருக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொரோனா பாதிப்பு தீவிரம் ஊரடங்கை காலவரையின்றி நீடித்தது சவுதி அரேபியா



(ரியாத்)
சவுதி அரேபியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையில், ஊரடங்கு உத்தரவு காலவரையின்றி நீடிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி மருத்துவத் துறைக்கு கடும் சவாலாக விளங்கி வருகிறது. நேற்றுக் காலை நிலவரப்படி 18.5 இலட்சம் பேருக்கு மேல் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. பலி எண்ணிக்கை ஒரு இலட்சத்து 15 ஆயிரத்தைத் தாண்டியது.

பல்வேறு நாடுகளில் ஏற்கனவே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நிலைமையின் தீவிரத் தன்மைக்கு ஏற்ப ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுகிறது.

அந்தவகையில் சவுதி அரேபியாவில் ஊரடங்கு உத்தரவை காலவரையின்றி நீடிப்பதாக அரசு அறிவித்துள்ளது.

தலைநகர் ரியாத் மற்றும் பிற பெரிய நகரங்களில் திங்கட்கிழமை முதல் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. அதன்பிறகு தினமும் 300 பேருக்குக் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

நாடு முழுவதும் முதலில் 3 வாரங்கள் மட்டுமே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதுவும் பிற்பகல் 3 மணி முதல் காலை 6 மணி வரை மட்டுமே உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது.

பொது மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வெளியே செல்லலாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்பின்னர் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியதால் ஊரடங்கு உத்தரவு திகதி குறிப்பிடப்படாமல் நீடிக்கப்பட்டது. ஊரடங்கு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.

சவுதி அரேபியாவில் 59 உயிரிழப்புக்களுடன் 4,462 நோய்த்தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். வளைகுடா நாடுகளில் சவுதியில் தான் அதிக பாதிப்பு ஏற்பட்டது. வளைகுடா நாடுகளில் மொத்தம் 14,100 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. 96 பேர் இறந்தனர்.

சவுதியில் வரும் வாரங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2 இலட்சத்தை எட்டக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. எனவே சர்வதேச பயணிகள் விமானங்களை சவுதி அரசு நிறுத்தியது. ஆண்டு முழுவதும் உம்ரா யாத்திரை நிறுத்திவைக்கப்பட்டு பெரும்பாலான பொது இடங்களை மூடியது. மற்ற வளைகுடா நாடுகளும் இதே போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 7500 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளை கொரோனா நிவாரண நிதியாக வழங்கல்

## டுவிட்டர் தலைமை அதிகாரி முன்மாதிரி



(நியூயோர்க்)
கொரோனா வைரஸ் நிவாரண நிதியாக தனது சொத்தில் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளை டுவிட்டர் நிறுவனத் தலைமை செயல் அதிகாரி வழங்கினார்.

கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கவும் மக்களுக்கு உதவவும் பல்வேறு நோக்கிலும் பல்வேறு நிறுவனங்கள் பல கோடி ரூபாய்களை நிவாரண உதவிகளாக வழங்கி வருகின்றன.

இந்நிலையில் டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான ஜாக் டோர்சி தனது சொத்தில் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,98,33,400 ஸ்கொயர் ஈக்விட்டி பங்குகளை லிமிட்டட் லையபிலிட்டி கம்பெனி என்ற நிறுவனத்திற்கு வழங்கினார்.

இந்தப் பங்குகள் மூலம் கிடைக்கும்பணம்கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# எமது முன்னோர்கள் காலத்தில் கேட்டிராத அனர்த்தங்களுக்கு நாம் இப்போது முகம் கொடுத்திருக்கின்றோம்



## “சமூக இடைவெளியைப் பேணி கொரோனா பரவுவதை தவிர்க்க அனைவரும் அர்பணிப்புடன் செயற்படுங்கள்”

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

எமது தேசத்தின் கலாசார தனித்துவத்தை எடுத்துக்காட்டும் மிகவும் சிறப்பு வாய்ந்த தேசிய கலாசார விழாவான சிங்கள, தமிழ் புத்தாண்டு மலர்ந்துள்ள இவ்வேளையில் பிறந்திருக்கும் புத்தாண்டு இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்ததாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

சூரியன் மேஷத்தில் பிரவேசிப்பதுடன் மலரும் புத்தாண்டு மகிழ்ச்சிக்கும் மன நிறைவுக்கும் பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்வதற்குமான தருணமாகும். எவ்வாறான போதும், எதிர்பாராதவிதமாக உலகெங்கிலும் பரவி வரும் கொரோனா வைரஸ் எமது நாட்டிலும் பரவி வருவதன் காரணமாக எமது முன்னோர்கள் காலத்திலும் கேட்டிராத அனர்த்தங்களுக்கு நாம் முகம் கொடுத்திருக்கின்றோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

எனவே சமூக இடைவெளியைப் பேண வேண்டியதன் அவசியத்தை சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியிருப்பதால் இம்முறை கூட்டாக பண்டிகையை கொண்டாடும் வாய்ப்புக்களில்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுப்பதற்குத் தன்னார்வமாக ஒன்றுபடும் எமது மக்கள் இந்தப் பண்டிகை காலத்திலும் சமூக இடைவெளியை பேணி வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படு வார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்த வாழ்த்துச் செய்தியில், இயற்கையின் அழகினால் வளம் பெறும் புத்தாண்டுப் பண்டிகை, மனிதன் இயற்கைக்கும் சுற்றுச் சூழலுக்கும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையாகும். இயற்கையுடன் ஒன்றித்து வாழ வேண்டிய தேவை மிகவும் உணரப்படும் ஒரு யுகத்திலேயே நாம் இப்போது இருக்கின்றோம்.

பன்னெடுங்காலமாக நாம் மிகுந்த கௌரவத்துடனும் அர்ப்பணிப்புடனும் மேற்கொண்டு வரும் புத்தாண்டு சம்பிரதாயங்களை, குறிப்பாக சுபவேளையில் வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து அடுப்புமூட்டுதல், பால் பொங்கவைத்தல், உணவுபரிமாறுதல் மற்றும் சம்பிரதாயபூர்வமாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றை இம்முறை குடும்பத்தினருடன் மட்டும் சேர்ந்து மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

புத்தாண்டின் மகிழ்ச்சிக்கு உண்மையான சொந்தக்காரர்கள் எமது சிறுபிள்ளைகளே ஆவர். இம்முறை புத்தாண்டு பண்டிகை கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதும் பிள்ளைகள் புத்தாண்டு மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். எனவே நீங்கள் வீடுகளில் இருந்தவாறு புத்தாண்டு சம்பிரதாயங்களை மேற்கொண்டு பிள்ளைகளுக்கு புத்தாண்டின் மகிமையை உணர்ந்து கொள்ள வாய்ப்பளியுங்கள் என அன்புடன் உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். நாடும்மக்களும் முகம் கொடுத்துள்ள இந் நோய்த்தொற்று பிரச்சினையை வெற்றி கொள்வதற்கு உறுதியுடன் கை கோர்த்திருப்பதை எமது புத்தாண்டு பிரார்த்தனைகளில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்வோம்.

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அரச, தனியார் ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யும் காலம் ஏப்.20 வரை நீடிப்பு

(கொழும்பு)

கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக அரச மற்றும் தனியார்த் துறை நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஊழியர்கள் வீடுகளிலிருந்து வேலை செய்யும் காலம் ஏப்ரல் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (இ)

## இரண்டாம் தவணைக்காக அனைத்து பாடசாலைகளும் மே 11 ஆம் திகதி திறப்பு

(கொழும்பு)

இரண்டாம் தவணைக்காக அனைத்துப் பாடசாலைகளும் மே மாதம் 11 ஆம் திகதி திங்களன்று திறக்கப்படவுள் ளன.

பாடசாலைகள் நடைபெறாத காலப்பகுதியில் மாணவர்களுக்கு முடியுமானளவு தொலைக்கல்வி வசதிகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2012

### மதுசா



தொட்டு விட தொட்டு விட தொடரும்....
கை பட்டு விட பட்டு விட பரவும்....
“கொரோனா”

### சுரேஸ்

ஊரே பயப்பிடுற மாதிரி பையனுக்கு
ஒரு பெயர் வைங்கண்ணே



கொரோனான்னு வை ஊரென்ன உலகமே
பயப்பிடும்

### பிரியா

சீனாவுக்கும் இலங்கைக்கும் ஒரு
வித்தியாசம் சொல்லு



சீனா கொரோனாவால்
பாதிக்கப்பட்டுள்ளது...
இலங்கை கொரோனா ரிங்டோனால்
பாதிக்கப்பட்டுள்ளது....

### சரண்




### லக்சி

எங்கள பாத்தா பாவமா இல்லையா
கொரோனா - இருந்திச்சே



எப்போ
கொரோனா - நிலவேம்பு கசாயத்தை வச்சு
என்னை விரட்ட போறன்னு சொன்னிங்களே
அப்போ

### தாஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.